முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில்
ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்
எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

குரோதி வருடம் சித்திரை மாதம் 22 திகதி முதல்
குரோதி வருடம் சித்திரை மாதம் 29 திகதி வரை
(05.05.2024 ஞாயிறு முதல் 12.05.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அவதார ஞானவள்ளலே அரங்கா
   அன்னதான நெறிமுறை வழி
   அவனியை தருமலோகம் ஆக்க
   அறச்சேவை ஆற்றும் தேசிகா
2. தேசிகனே உன்பெருமை கூறி
   தெரிவிப்பேன் அகத்திய மகரிஷியும்
   ஆசிதந்து இந்தியா தமிழகம் தன்னில்
   அச்சமற குரோதி தகர்திங்கள் இருபானீர் திகதிமேல்
3. மேலாக இருபான்நவ திகதிவரை
   மேதினியில் நடக்கும் வார நிகழ்வாக
   கோலமதாய் வருங்கால பலன்குறித்த
   கூறிடுவேன் வாரஆசி தன்னை
4. ஆசிதனில் அளவிலா கதிரவனின்
   ஆற்றல் வெப்ப சலனம் மிகுந்து
   பேசிட இந்தியா தமிழகத்தில்
   பிணி சோடை மிகுதி காட்டும்
5. காட்டுமே இயற்கையும் பொய்க்க
   கஷ்டங்கள் விளைச்சலில் உண்டு
   வாட்டமுற கால்நடை பிற ஜீவராசிகளும்
   வதை காண நேரும் என்பேன்

6. என்கவே ஆளுமை சக்திகளும்
இரக்கம் கொண்டு தருமவழி
நன்மை தரும் செயல்திட்டம் காண
நாட்டிடுவேன் பாதிப்புகள் அகலும்
7. அகலவே ஆளுமை சக்திகட்கு
அச்சமூட்டும் தேர்தல் முடிவாக
வகைபட கண்டு மக்கள் சக்தி
வாக்கு வல்லமை அறிய நேரும்
8. நேருமை இல்லாத தலைமைகள்
நிந்தனை பின்னடைவு கண்டு
வருங்கால அரசியல் காலம்
வாழ்வை பற்றி சிந்திக்க நேரும்
9. நேருமையான ஞானவழிகளை
நிலவுலகில் தருமத்துடன் காட்டும்
ஆறுமுக அரங்கமகா ஞானி
அருட்தயவு கொள்கை வழியில் வர
10.வருகவே இந்தியா தமிழகத்தில்
வதை வறுமை பிணி கட்டமில்லா
தருமசக்தி பலத்தால் பாதுகாப்புகூடி
தரணியே வியக்க வளமும் பலமும் காண்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

குரோதி வருடம் சித்திரை மாதம் 22ம் நாள் 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள் 12.05.2024 ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகள் :

உலகினில் தர்மநெறி வளர்க்க வள்ளல் ஞானியாக அவதரித்திட்ட அரங்க மகானே உலகினை அன்னதான நெறியின் மூலமாக இவ்வுலகை தரும லோகமாக மாற்றிட எல்லையில்லாது தர்மங்களை செய்து வருகின்ற ஞானதேசிகனே ஆறுமுக அரங்கனே உமது பெருமையை உலகெலாம் கூறியே இந்தியா தமிழகத்திலே குரோதி வருடம் சித்திரை மாதம் 22ம் நாள் 05.05.2024

ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் **29**ம் நாள் **12.05.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

சூரியனின் ஆற்றல் அதிகமாகி நாட்டினில் வெப்ப சலனம் மிகுதியாகும் ஆதலினால் சூரிய வெப்ப சலனத்தினாலே இந்தியா தமிழகத்திலே வெப்ப நோய்கள் அதிகமாகும் மழை பெய்திட வாய்ப்பும் இல்லாத படியினாலே விளைச்சல் குறையும், கால்நடைகளும் பிற ஜீவராசிகளும் பாதிப்படையும் ஆட்சி புரிவோர் தானதருமங்களை தாராளமாய் செய்திட்டால் பாதிப்புகள் அகலுமப்பா. தேர்தல் முடிவுகளை எண்ணி அரசியல் செய்வோர் அச்சமுற நேரும் மக்களின் சக்தியை அறிந்திட நேரும் நேர்மையற்றவர்கள் பின்னடைவு காண்பர் அவர்கள் வருங்கால அரசியலின் வாழ்வை எண்ணி கவலைப்படுவார்கள்.

நேர்மை மிக்க தர்ம நெறியாம் அரங்க மகான் கூறும் ஜீவதயவு நெறியை அரசியல் செய்வோர் ஏற்று கடைப்பிடித்து வந்தால் இந்தியா தமிழகத்திலே சாவு, வறுமை, நோய் கஷ்டங்கள் இல்லாத நிலை தருமபலத்தால் உருவாகி தருமத்தின் பாதுகாப்பும் பெருகி உலகமே வியக்குமாறு நாடு எல்லா வளமும் நலமும் பெற்று சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–